IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.226/2018
DEPOSITION OF WITNESS (DW2)

ஆரம்ப நேரம்:11.15a.m.

பி.வா.சா. 2 சாட்சி பாண்டி த.பெ. மலையாண்டி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 19.03.2025 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் 7ம்வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு ஓரளவுக்கு எழுதப்படிக்க தெரியும். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க பிரதிவாதிதான் என்னை அழைத்தார் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தையும், எனது தந்தையும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு 4பையன்கள் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது தந்தை மற்றும் பிரதிவாதியின் தந்தையும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். எழுத்துப்பூர்வமாக பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் இல்லை.

2. பிரதிவாதி எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் பக்கத்து இடத்துக்காரர் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக பிரதிவாதி கூறினார். நிரூபணவாக்குமூலம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது எனது வழக்கறிஞருக்கு தெரியும். எதிர்கோரிக்கையில் உள்ள சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 70/3, மற்றும் சர்வே எண் 70/13 ஆகும். மேற்படி இரண்டு சர்வே எண்களில் உள்ள

சொத்துக்களையும் 1960ல் எனது பெரியப்பா எழுதிக்கொடுத்தார். அது பி.வா.சா.ஆ1 ஆகும்.

3. பி.வா.சா.ஆ.1ல் கட்டுப்பட்டுள்ள சர்வே எண் 70/3ஐ எனது தந்தைக்கு பிரதிவாதி 2007ல் பாகவிடுதலை எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. சாலை விரிவாக்கத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டபோது அதற்கான இழப்பீட்டுதொகையை நான்தான் பெற்றேன் என்றால் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு இழப்பீடு நான் வாங்கினேன். பி.வா.சா.ஆ.1ஐ படித்து பார்த்துள்ளேனா அதில் உள்ள நான்குமால் விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

4. சர்வே எண் 70/3, சர்வே எண் 70/13 க்கு அருகில் சீனியம்மாள் என்பவரின் இடம் இருந்ததா என்றால் இடம் உள்ளது யார் இடம் என்று எனக்கு தெரியாது. வாதி முத்துவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நபர் அவர் அம்மா கிரையம் வாங்கிய சொத்தில்தான் குடியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண் 70/3, சர்வே எண் 70/13தான் சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7 என்று மாறியதற்கான ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் பார்த்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

5. பிரதிவாதி பாண்டியின் வழக்குச் சொத்தின் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் சொத்து தெரியும், நான்குமால் தெரியாது. பொதுவாக நான்குமாலில் சொத்துக்கு அருகில் உள்ளவர்களை குறிப்பிட்டு சொல்வார்கள் என்றால் சரிதான். வாதியின் இடத்தை எனது நான்குமாலில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சர்வே எண் 70/3ல் தென்கிழக்கில்

உள்ளதால் குறிப்பிடவில்லை. நீதிமன்ற ஆணையர் அளக்கும்போது பார்த்தேன்.

6. நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ள விபரம் பற்றியும், யார் இடம் எந்த பக்கம் உள்ளது என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி பாண்டி என்பவர் எனது பெரியப்பாமகன் என்பதால் வழக்கு பற்றிய எந்த விபரமும் தெரியாமல் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் இடத்திற்கு அருகில் எனது இடமோ, பிரதிவாதி இடமோ இல்லை என்றும், வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:11.35 a.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.